**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் தைத்திங்கள் 10–ம் நாள்

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.5/2024

இன்

அசல் வழக்கு எண்.35/2021

(CNR.No.TNTR21-000040-2021)

...

1. ராஜம்மாள் (இறந்துவிட்டார்)
2. வசந்தி
3. ஜெயந்தி
4. மாணிக்கம் ... மனுதாரர்கள்/1 முதல் 3, 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. P. ராமமூர்த்தி நாயுடு ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. லதா
3. வட்டாட்சியர், திருத்தணி
4. வருவாய் கோட்டாட்சியர், திருத்தணி
5. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 4, 6 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.01.2025 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/1 முதல் 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் P. குப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்/ 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதரப்பாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் வழக்கு சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுவின் சுருக்கம்:–</u>**

(அ) அசல் வழக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர் தனது தாயார் சகோதரிகளுடன் அமைதியாக அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் வழக்கு சொத்தில் கடைகளை கட்டி 5ம் பிரதிவாதியான மணிகண்டன், கணேஷ் மற்றும் டில்லிபாபு ஆகியோர்களுக்கு

வாடகைக்கு விட்டுள்ளார். மனுதாரர்களுக்கு முன்பு மனுதாரரின் தகப்பனார் செங்கம்ம நாயுடு 65 ஆண்டுகளாக குடிசை வீடு கட்டி வசித்து வந்துள்ளார். 6 வருடங்களுக்கு முன்பு குடிசை வீடு உருக்குலைந்து போய்விட்டது. எனவே தகர ஓடுடன் கூடிய வீடு 5 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீட்டில்தான் மனுதாரர் வசித்து வருகிறார். வழக்கு சொத்தில் ஒரு கழிவறை, குளியல் அறை ஆகியவைகள் மனுதாரரால் கட்டப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தென்னை மரங்கள், எலுமிச்சை மரம், நார்த்தங்காய் மரம், அசோகா மரம் ஆகியவற்றை வைத்துள்ளனர். மனுதாரர் வீட்டு வரி, மின்கட்டணம் செலுத்தி உண்மையான அனுபவத்தில் உள்ளனர்.

(ஆ) வாதி எந்தகாலத்திலும் வழக்கு சொத்தை அனுபவிக்கவில்லை. எனவே வழக்கு சொத்தில் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டால் தேவையற்ற வாய்மொழி சாட்சியம் குறையும். நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் வழக்கு சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அங்குள்ள தகர ஓடுகளுடனான வீடு, 2 கடைகள், 2 சிமெண்ட் ஓடு அமைக்கப்பட்ட கடைகள், குளியல் அறை, கழிவறை ஆகியவற்றைப் பொறுத்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை இல்லாமல் இந்த வழக்கை நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது.

2. **<u>1ம் எதிர்மனுதாரரின் மறுப்புரையின் சுருக்கம்:—</u>**

(அ) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனு பத்தி 2ல் சொல்லியுள்ளவாறு இந்த எதிர்மனுதாரர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது உண்மை. மனு பத்தி 3ல் சொல்லியுள்ளபடி மனுதாரர் அவரது தாயார் மற்றும் சகோதரிகளுடன் கடைகள் கட்டி 5ம் பிரதிவாதி, கணேஷ் மற்றும் டில்லிபாபு ஆகியோர்களுக்கு வாடகைக்கு விட்டு அனுபவித்து வருவதாகவும், 65 வருடங்களுக்கு முன்பு அவரது தகப்பனார் குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்ததாகவும் கூறுவது பொய்.

(ஆ) வழக்கு புல எண்.177/4ல் விஸ்தீரணம் 8செண்ட் உண்மையில் அரசுக்கு சொந்தமான அனாதீனம் ஆகும். சுப்பா நாயுடு மகன் செங்கம்ம நாயுடு ஆக்கிரமிப்பு செய்து ஓலை குடிசை மற்றும் சிமெண்ட் ஓடு போட்ட வீடு அமைத்து மின்னிணைப்பு பெற்று 1999 முதல் அனுபவத்தில் இருந்து, தனது குடும்ப தேவைக்காகவும், மகளின் திருமண செலவுகளுக்காவும் மேற்படி செங்கம்ம நாயுடு பதிவு செய்யாத கிரைய ஆவணம் மூலம் 20.07.2015ம் தேதியிட்டு வாதிக்கு கிரையம் கொடுத்து வாதி அனுபவத்தில் உள்ளார். மேற்படி கிரைய ஆவணம் அரசுக்கு சொந்தமான அனாதீனம் நிலம் என்பதால் பதிவு செய்யப்படவில்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் சட்ட விரோதமாக 30.03.2021 முதல் இடைஞ்சல் செய்து வருகிறார்கள். எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

(இ) இந்த வழக்கில் இயற்கை அமைப்புகளை குறித்து எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் வழக்கு சொத்து விற்கப்பட்டதா? இல்லையா? என்பது மட்டும்தான் பிரச்சனை ஆகும். இந்த சூழ்நிலையில் இயற்கை அமைப்புகளையும் அவர்களின் அனுபவத்தையும் குறிப்பிடுவது தேவையற்றது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 2023 (4) TLNJ 26 (Civil) மற்றும் CRP.(Md) No.2653/2018 and C.M.P.No.11666/2018 ஆகிய வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய முடியாது. இந்த மனுவில் எந்த நல்லெண்ணமும் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>தீர்வு:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு சொத்தில் வீடு, கடைகள், தென்னை மரங்கள், எலுமிச்சை மரம் உள்ளிட்ட மரங்கள் வளர்த்து மனுதாரர் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருப்பதை காட்ட கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியம் என்றும் மனுவை அனுமதிக்க கோரி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கு சொத்தை செங்கம்ம நாயுடு என்பவரிடமிருந்து 20.07.2015ம் தேதியிட்டு வாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், இவ்வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பை பொறுத்து எந்த பிரச்சனையும் இல்லை என்றும், மேற்படி கிரையம் செல்லத்தக்கதா? இல்லையா? என்பதை பொறுத்துதான் பிரச்சனை உள்ளது என்பதால் நீதிமன்ற ஆணையர் நியமனம் தேவையில்லை என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது. கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2024 (4) TNLJ 598 (Civil) என்ற தீர்ப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2024 (4) TNLJ 598 (Civil) விஜயராகவன் எதிர் கல்யாண வெங்கடராம ராஜா என்ற வழக்கில்,

> 12. Admittedly, It is a suit for bare injunction filed by respondent/plaintiff claiming right over the suit property through a partition deed, dated 02.02.1946. But the plaintiff denied the execution of exchange deed which according to defendants that father of plaintiff and his grandfather Sanjeevi Raja exchanged the property between themselves. There is no dispute with regard to identification and demarcating the area. Therefore, the Trial court has rightly dismissed the application for appointment of Advocate Commissioner stating that if the title is proved, it would resolve the real dispute. Therefore, the order under revision do not suffer any fundamental irregularity or jurisdictional error warranting interference by this Court.”

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் ஆவணம் செல்லத்தக்கதா? இல்லையா? என்பதை மட்டுமே தீர்மானிக்க வேண்டியிருப்பதால் நீதிமன்ற ஆணையர் நியமனம் தேவையில்லை என்று முடிவு காணப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி கூறியபடி மேற்படி கிரைய ஆவணப்படி இந்த அசல் வழக்கு தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது என்ற வாதியின் வாதத்தை கருத்திற்கொண்டு இவ்வழக்கின் சூழ்நிலைக்கு மேற்கண்ட மாண்பமை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi,
23.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

Sd/- R.D. Gurulakshmi,
23.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.